# வணாத்தவில்லு பிரதேச சபை
## புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 24 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, வணாத்தவில்லு பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வணாத்தவில்லு பிரதேச சபையின நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபைக்குரிய 02 மருந்தகக் கட்டிடங்களினதும், 03 நீர்த் தாங்கிகளினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிராததுடன்

மருந்தகம் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணியின் பெறுமதியான ரூபா 300,000 கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 46,455,123 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 3,016,636 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,784,446 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் பெறவேண்டிய கணக்குகளின் மீதிகளின் பெறுமதி ரூபா 4,423,444 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ஒரு வருட காலத்திற்கு மேலாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 519,426 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 731,572 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய மீதிகளின் பெறுமதி ரூபா 258,712 ஆக இருந்தது.

(இ) 2010 மே 13 ஆம் திகதிய 5/3 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் காலாவதியான மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் ரூபா 712,007 தொகையான வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 1,491 | 515 | 976 |
| (ii) | வாடகை | 1,190 | 1,100 | 90 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 228 | 228 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 7,337 | 4,904 | 2,433 |

### 2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப் பணம் | 632,628 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,800,000 |

## 2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்

ரூபா 500,000 பெறுமதியான 06 நீர்ப் பம்பிகள் 5 வருட காலமாகவும், ரூபா 70,000 பெறுமதியான 2000 லீற்றர் பவுசர்களும் ரூபா 40,000 பெறுமதியான 1 ½ அங்குல மின்சார மோட்டர் 03 வருடகாலமாகவும் ரூபா 300,000 பெறுமதியான 49-7272 ஆம் இலக்க உழவு இயந்திரமும், ரூபா 60,000 பெறுமதியான 04 அங்குல மின்சார மோட்டர்கள், பெறுமதி மதிப்பிடப்படாத 29 சேதனப் பசளைத் தாங்கிகள் 02 ஆண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

## 2.5 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்குரிய 2 நூலகங்களின் மூலம் வாசிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 67,684 பெறுமதியான 449 நூலகப் புத்தகங்கள் மீளச் செலுத்தப்பட வேண்டிய காலம் கடந்திருந்த போதிலும் அப் புத்தகங்கள் மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1989 ஏப்ரல் 17 ஆம் திகதிய 554/5 ஆம் இலக்க இலங்கை குடியரசின் அதிவிசேட வர்த்தமானி எ(ஆ) பிரிவின் 205 விதியின் பிரகாரம் சபைக்குரிய சகல சொத்துக்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 திசெம்பர் 15 ஆம் திகதிய வ/பி.செ./5/4/1/8 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் பிணை வைக்கப்பட வேண்டிய எந்த ஊழியரிடமிருந்தும் பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டின் போது 04 ஒப்பந்த வேலைகளின் மூலம் வேலை ஆரம்பிக்கப்பட்ட திண்மக் கழிவு நிலையத்தை நிர்மாணிப்பதற்குரிய உடன்படிக்கைக் காலம் நிறைவேறியிருந்த போதிலும் 2013 மே 30 ஆம்

திகதி கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் அவற்றின் வேலை நிறைவேறியிருக்கவில்லை.

**2.6 உள்ளகக் கணக்காய்வு**

----------------------------------

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

--------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்